## கழக அரசு பொறுப்பேற்ற பிறகுதான் – கடந்த 4 ஆண்டுகளில் 4000– 5000 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து

# அனைத்துக் கல்லூரிகளின் பணிகள் முடிந்து திறந்து வைக்கப்படுகின்றன!

## பேரவையில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!



சென்னை, மார்ச். 21 - விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேரவையில் அளித்த பதில் வருமாறு:

நேற்றைக்கு இது சம்பந்தமாக நான் விரிவாக இங்கே பதில் சொல்லி இருக்கிறேன். 1 கோடியே 47 இலட்சம் குடும்பங்கள் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள். பெருமதிப்பிற்குரிய மன்ற உறுப்பினர் இங்கே சொன்னதைப் போல அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் insurance Scheme-லே இருக்கிற முரண்பாடுகளை மட்டும் ஒரு இரண்டு நிமிடங்கள் சொல்கிறேன். Premium தொகை அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வெறும் ரூ.699/- இப்போது முதல்வர் அவர்கள் ரூ.849/- ஆக உயர்த்தி இருக்கிறார். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/- இப்போது ரூ.1,20,000/- ஆக உயர்த்தி இருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் காப்புறுதித் தொகை வெறும் ரூ.2 இலட்சம், நம்முடைய முதல்வர் அவர்கள் ரூ.5 இலட்சமாக உயர்த்தி இருக்கிறார்கள். சிகிச்சை முறைகள் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 1450 மட்டும்தான். தற்போது 2053 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 970. தற்போது இரண்டு மடங்கு உயர்ந்து 2175. அவர் சொன்னார் அல்லவா, அந்த transplant, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த பிரத்யேக சிகிச்சை முறைகள் வெறும் 2, இப்போது 8. ரூ.22 இலட்சம் வரை insurance என்பது முதலமைச்சர் அவர்களுடைய அந்த வழிகாட்டுதலோடு தொடர்ச்சியாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக 8 உயர் அறுவை சிகிச்சைகள், எது எது என்று அவர்களுக்கும் தெரிந்திருக்கும். கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, காதுவால் நரம்பு உள் வைப்பு அறுவை சிகிச்சை, stem cell மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் வால்வு மாற்று அறுவை சிகிச்சை, செவிப்புல மூளை தண்டு உள்வைப்பு அறுவை சிகிச்சை இவையெல்லாமே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, கடந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு கொண்டிருந்தது. ஆனால் இரண்டே மாற்று அறுவை சிகிச்சைகள் மட்டும்தான் கடந்த காலத்தில் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. எங்கேயோ மறுக்கப்படுகிறது என்று அவர் சொன்னார். அதுபோன்று மறுக்கப்படுகிற மருத்துவமனைகளின் பட்டியல் தந்தால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதோடு மருத்துவக் கல்லூரிகள் பற்றியும் சொல்லி இருக்கிறார். ஏற்கெனவே, இதுசம்பந்தமாக நிறைய முறை நான் சொல்லி இருக்கிறேன். 2011இல் இதே அவையில் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் இந்தியாவிற்கே வழிகாட்டும் ஒரு அமைப்பு ஒன்றை உருவாக்கினார். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மருத்துவக்கல்லூரி என்கின்ற மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்தவர் அவர்தான். இந்த 11 மருத்துவக்கல்லூரிகள் சம்பந்தமாக ஏற்கெனவே நிறைய முறை சொல்லி இருக்கிறோம். இந்த 11 மருத்துவக்கல்லூரிகளில் 6,7 மருத்துவக்கல்லூரிகள் AS-Administrative Sanction பெறப்பட்டது, இடங்கள் தேர்வு செய்யப்பட்டது எல்லாமே அப்போதுதான். அந்த 11 மருத்துவக் கல்லூரிகளையும் நீங்கள் துவக்கி வைத்து விட்டுச் சென்றீர்களே தவிர, இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகுதான், கடந்த 4 ஆண்டுகளில் ஏறத்தாழ 4,000-5,000 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து, அனைத்துக் கல்லூரிகளின் பணிகளும் முடிவுற்று, தற்போது தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டு வருகின்றன. அவற்றிலும் 10 மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் கடந்த 4 ஆண்டுகாலத்தில், தொடர்ச்சியாககட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு தண்ணீர் வசதியே இல்லாத நிலையில் கல்லூரி கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் தற்போது அதற்கான வசதிகளைச் செய்து திறந்து வைத்தார்கள். அதேபோன்று, நாமக்கல் மாவட்டத்திலும், குடிநீர் வசதி சிறிதும் இல்லாத ஓர் இடத்தில் மருத்துவக் கல்லூரியும், மருத்துவமனையையும் உங்கள் ஆட்சியில் திட்டமிடப்பட்டு, இன்றைக்கு அதற்கான முழு செலவையும், கிட்டத்தட்ட ரூ.400 கோடி செலவு செய்யப்பட்டு, இன்றைக்கு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், கடைசியாக உதகை மருத்துவக் கல்லூரியும் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட உள்ளது. அனைத்துக் கட்டுமானப் பணிகளும் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், ஏறத்தாழ ரூ.300 கோடிக்கு மேலாக செலவு செய்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எனவே, மருத்துவக்கல்லூரிகள் அறிவிக்கப்பட்டவை உங்கள் ஆட்சியில்தான் என்றாலும், அறிவிக்கப்பட்ட அனைத்து மருத்துவக்கல்லூரிகளும் இன்றைக்கு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஒவ்வோராண்டிலும் ஒதுக்கிக் கொண்டிருக்கின்ற நிதி ஆதாரத்தினால்தான் என்பதை உறுப்பினர் அவர்களும் நன்றாக அறிவார்கள் என்பதையும் தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் பதிலளித்தார்.

## நெய்வேலி சட்டமன்றத் தொகுதி

# கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் – சபா.இராஜேந்திரன் கோரிக்கை!



சென்னை, மார்ச் 21 - பேரவையில் கேள்வி நேரத்தின் போது கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்று அமைத்திட வேண்டும் என்று சபா.இராஜேந்திரன் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**சபா. இராஜேந்திரன்:** நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, திருவாமூர் ஊராட்சி, காமாட்சிப் பேட்டை கிராமத்தில் ஒரு தடுப்பணைக் கட்ட வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். NLC நிறுவனத்தால் நிலத்தடிநீரும் குறைந்து கொண்டே வருகிறது, குடிதண்ணீரும் உப்பாக மாறிக்கொண்டிருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் சரிசெய்வதற்கு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியிலே, கெடிலம் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையைக் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** என்னுடைய இலாகாவின் பெரிய கோரிக்கையே தடுப்பணைதான். இப்போது வந்திருப்பதால் நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், வருகிற நிதிநிலை, என்னுடைய இலாகாவிற்கு ஒதுக்கப்படுகிற நிதியை வைத்துப் பார்த்தால் அங்கொன்றும், இங்கொன்றுமாகத்தான் கட்ட முடிகிறதே தவிர, எல்லா உறுப்பினர்களுடைய ஆசைகளையோ அல்லதுவிருப்பங்களையோ நிறைவேற்ற முடியவில்லை. எனவேதான் நான் சொன்னேன். சில நேரங்களில், நான் படிக்கும்போதே எங்கு தடுப்பணைக் கட்ட வேண்டுமென்று எனக்கு detail ஆகத் தெரியும். அதிலே சில இடங்களில் கட்ட வேண்டுமென்றாலும் நிதி நிலைமை சரியில்லை. ஆகையினால்தான் தென்னரசு அவர்களை உங்களுக்கு முன்னாலே நான் துணைக்கு அழைத்தேன். இதுகுறித்து முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் ஒரு முறை நான் சொல்லியிருக்கிறேன். எல்லா உறுப்பினர்களும் அணை கட்டித் தர வேண்டுமென்கிறார்கள். ஒரு காலத்தில் அணைக் கட்டு என்பார்கள். இப்போது அணை கட்டுகிற பிரச்சினை சென்றுவிட்டது. தடுப்பணை கட்டுவதில்தான் பிரச்சினை. தடுப்பணை கட்டுவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கிறது என்பதுகூட என்னுடைய அனுபவத்திலே நான் கண்டிருக்கிற உண்மை. ஆகையினால், இதுகுறித்து தனியாக முதலமைச்சர் அவர்களிடம் நான் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# புதுக்கோட்டையில் 14 புதிய பேருந்து வழித்தட சேவைகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி கொடியசைத்து துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, மார்ச் 21 - புதுக்கோட்டை மாநகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 14 புதிய பேருந்து வழித்தட சேவையினை, சட்டம், நீதிமன்றங் கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 13.03.2025 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலன் மீது அதிக அக்கறை கொண்டு எண்ணற்றத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழகத்தின் முன்னோடித் திட்டமான, நகரப் பேருந்துகளில் மகளிர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகளுக்கு இலவச பேருந்து பயணத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, புதுக்கோட்டையில் இருந்து திருக்கோகர்ணம், முத்துடையான்பட்டி, நார்த்தாமலை, குளத்தூர் வழியாக கீரனூருக்கும், புதுக்கோட்டையில் இருந்து நமணசமுத்திரம், லேணாவிளக்கு, திருமயம், கடியாபட்டி வழியாக ராயவரத்திற்கும், புதுக்கோட்டையில் இருந்து மருத்துவக்கல்லூரி, வடவாளம், மூக்கம்பட்டி, மழையூர் வழியாக துவாருக்கும், புதுக்கோட்டையில் இருந்து திருச்சி, முசிறி, தொட்டியம், நாமக்கல் வழியாக சேலத்திற்கும், அறந்தாங்கியில் இருந்து ரெத்தினக் கோட்டை, வல்லவாரி, சித்தாதிகாடு வழியாக பேராவூரணிக்கும், அறந்தாங்கியில் இருந்து மேலப்பட்டு, நாகுடி, சிங்கவனம், மேலப்பட்டு, நாகுடி, வேதியன்காடு வழியாக காரக்கோட்டைக்கும், அறந்தாங்கியில் இருந்து காரைக்குடி, திருப்பத்தூர், மேலூர் வழியாக மதுரைக்கும் புதிய பேருந்து வழித்தட சேவைகள் துவக்கி வைக்கப்பட்டது. மேலும், கந்தர்வகோட்டையில் இருந்து கோமாபுரம், தச்சங்குறிச்சி, டி.பி.சானிடோரியம் வழியாக செங்கிப்பட்டிக்கும், கந்தர்வக் கோட்டையில் இருந்து சுந்தம்பட்டி, வேலாடிப்பட்டி, அம்புகோவில் வழியாக கறம்பக்குடிக்கும், திருச்சியில் இருந்து டி.வி.எஸ் டோல்கேட், ஏர் போர்ட், மாத்தூர் ரவுண்டானா, பாரதிதாசன் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், காளமாவூர் வழியாக கீரனூருக்கும்,

இலுப்பூரில் இருந்து மேட்டுச்சாலை, காலாடிபட்டி சத்திரம், அன்னவாசல், திருவப்பூர் வழியாக புதுக்கோட்டைக்கும், பொன்னமராவதியில் இருந்து ஆலவயல், நகரப்பட்டி, பாலகுறிச்சி, ஒலியமங்கலம் வழியாக சடையம்பட்டிக்கும், புதுக்கோட்டையில் இருந்து திருவரங்குளம், வம்பன் 4 ரோடு, ஆலங்குடி, பள்ளத்திவிடுதி வழியாக கொத்தமங்கலத்திற்கும், இலுப்பூரில் இருந்து இருந்திராபட்டி, பாக்குடி, ஒடுக்கூர், லெக்கனாபட்டி, குளத்தூர் வழியாக கீரனூருக்கும் என ஆகமொத்தம் 14 புதிய பேருந்து வழித்தட சேவைகள் துவக்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் புதுக்கோட்டையிலிருந்து மற்ற பகுதிகளுக்கு செல்லும் பொதுமக்கள் பயனடைவார்கள்.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இந்த புதிய பேருந்து சேவைகளை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), பொது மேலாளர் (த.அ.போ.க.) கே.முகமதுநாசர், புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர்த.நாராயணன், உதவி இயக்குநர் (த.அ.போ.க.) அ.செந்தில், துணை மேலாளர்கள் தா.சுரேஷ் பார்த்திபன் டிக்ரோஸ் (வணிகம்), ராஜேந்திரன் (தொழில்நுட்பம்), புதுக்கோட்டை வட்டாட்சியர் மு. செந்தில் நாயகி, அரு.வீரமணி, தொமுச பொதுச் செயலாளர் எம்.வேலுசாமி, எம்.எம்.பாலு, மாமன்ற உறுப்பினர் கனகம்மன்பாபு, ஞானசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## விவசாயிகள் வாழ்வாதாரம் பாதிப்பு! ஈரோடு தொகுதியில்

# வெறிநாய்களைக் கட்டுப்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மக்களவையில் கே.இ.பிரகாஷ் கோரிக்கை!



புதுடெல்லி, மார்ச் 21 - ஈரோடு தொகுதியில் வெறிநாய்கள் அதிகமாகி உள்ளது எனவும், இதனால் விவசாயிகள் வளர்க்கிற ஆடு, மாடுகள் பலியாவதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்றும், எனவே வெறிநாய்களை கட்டுப்படுத்த ஒன்றிய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களவையில் கழக உறுப்பினர் கே.இ.பிர காஷ் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மக்களவையில் பேசியதாவது:

சபாநாயகர் அவர்களே எனது ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம் காங்கேயம் மொடக்குறிச்சி ஈரோடு கிழக்கு ஈரோடு மேற்கு குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி மற்றும் சென்னிமலை பகுதியில் தெரு நாய்கள் மற்றும் நோய்வாய் பட்ட வெறி நாய்கள் அதிகம் காணப்படுவதால் பொதுமக்கள் மிகவும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

இதில் கிராமப்புறங்களில் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளார்கள் அவர்களுடைய வளர்ப்பு பிராணி ஆன ஆடு மாடு கோழிகள் மற்றும் நோய்வாய்ப்பட்ட வெறி நாய்களின் தாக்குதலால் அவ்வகைப் பிராணிகள் இறப்பிற்குள்ளாகி விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

வீட்டில் வளர்க்கும் நாய்களினால் நோய் ஏற்படும் போது குழந்தைகள் பாதிப்புக்கு உள்ளாகி உயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஒன்றிய அரசு தாக்குதல் உட்பட்ட பிராணிகளுக்கு கணக்கெடுப்பு நடத்தி அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுகிறேன்

அதே சமயம் இந்த நோய்வாய் பட்ட வெறி நாய்களை கட்டுப்படுத்த ஒன்றிய அரசு சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும் .

மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய நோய் வாய்ப்பட்ட வெறி நாய்களை ப்ளூ கிராஸ் அமைப்பு மற்றும் அனிமல் வெல்ஃபேர் போர்ட் ஆஃப் இந்தியா என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று தெளிவுபடுத்த வேண்டும்

அதே போல வரும் காலங்களில் பாதிப்பு ஏற்படும்போது விவசாயிகளுக்கு தங்களுடைய பொருளாதார இழப்பு ஏற்படாத வகையில் வீட்டு வளர்ப்பு பிராணிகளுக்கு ஆடு மாடு கோழி போன்றவைகளுக்கு ஒன்றிய அரசு உயிர் காப்பீடு செய்து கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு போராடும்
தமிழ்நாடு வெல்லும்

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. பேசினார்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய கலந்துரையாடல் கூட்டம் ஆணைய தலைவர் அருட்தந்தை சொ.ஜோ அருண் சே.ச தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் , மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், மாநகர காவல் ஆணையர் எஸ்.ராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஸ் அசோக், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் ஹேமில்டன் வில்சன், எ.ஸ்வர்ணராஜ், பிரவீன் குமார் டாட்டியா, ராஜேந்திர பிரசாத், ரமீட் கபூர், ஜே.முகமது ரஃபி, எஸ்.வசந்த், சிறுபான்மையினர் நலத் துணை இயக்குநர் சர்மிளி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மு.செல்வி ஆகியோர் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் நரசிங்கபுரம் நகர தி.மு.க சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, நகர செயலாளர் வேல்முருகன், தலைமை கழக பேச்சாளர் கோவை சிங்கை பிரபாகரன், துணை செயலாளர்கள் பிரகாஷ், பரமசிவம், சாந்தி, இளவரசு, ராமசாமி, விஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர் முத்துலிங்கம், சக்திவேல், மணிபாரதி, நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், நகர நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–4க்கு உட்பட்ட தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 18-03-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி